20th January 1965]

திரு. டி. கார்ச்சா கவுடர்: சமீபத்தில் ஏற்பட்ட புயலின் விளைவாக இராமேஸ்வரம் கோவில் பழுதடைந்திருக்கிறதா? அவ்வாறு பழுதடைந்திருந்தால் அதைப் புதுப்பிக்க முயற்சி எடுப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இராமேஸ்வரம் ஆலயத்தைப் பொறுத்தவரையில் பழுது ஒன்றும் ஏற்படவில்லை.

Accidents in traffic

* 19 *Q.*—SRI K. CHEEMAICHAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of lorry accidents during 1963–64 ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: *1963-64-ல்* தமிழ் நாட்டில் ஏற்பட்ட லாரி விபத்துக்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

மரண விபத்துக்கள்	390
பெரிய விபத்துக்கள்	521
சிறிய விபத்துக்கள்	1,231
யாருக்கும் காயம் ஏற்படாத விபத்துக்கள் ..	419
மொத்தம் ..	2,561

திரு. கரு. சீமைச்சாமி: இந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதைப் பற்றிய ஒரு நீண்ட அறிக்கை சபை முன்பு வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த 390 விபத்துக்களில் இரவு நேரங்களில் எத்தனை மரண விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று கூற முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாகக் கேள்வி போட்டால், தகவல் சேகரித்துச் சொல்ல முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த விபத்துக்கள் வரவரக் குறைந்து கொண்டு இருக்கின்றனவா, அல்லது அதிகரித்துக் கொண்டு வருகின்றனவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: விபத்துக்களின் எண்ணிக்கை குறைத்துகொண்டு வருகிறது. ஆனால் விபத்துக்களின் 'நேச்சர்' அதிகரித்துக்கொண்டு வருகிறது. மரண விபத்துக்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. மற்ற விபத்துக்கள் குறைந்து கொண்டு வருகின்றன.

திரு. கரு. சீமைச்சாமி: மதுரை, இராமநாதபுரம் போன்ற இடங்களில் விபத்துக்களைத் தடுப்பதற்கு பறக்கும் போலீஸ் படை ஒன்று இருக்கிறது. வேகமாகச் செல்லும் கார்களைப்

[20th January 1965

பிடித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். லாரிகள் வேகமாகச் செல்வதைத் தடுப்பதற்கு இம்மாதிரி ஒரு போலிஸ் படையை வைத்துப் பிடிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னை நகரத்திலும் அந்த விதமான ஸ்குவாட் இருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான விபத்துக்கள் இரவு நேரங்களில் ஏற்படுவதாகவும், டிரைவர்கள் தூக்கமின்மையினால் ஓட்டுவதால் ஏற்படுவதாகவும் புகார்கள் கூறப்படுகின்றன. தூக்கமின்மையின் காரணமாக ஓட்டும்பொழுது எதிரில் வருகின்ற லாரியின் வெளிச்சம் காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. இதைக் கட்டுப் படுத்தும் வகையில் இரவு 12 மணியிலிருந்து காலை 3 மணி வரை லாரிகளை ஓட்டக் கூடாது என்ற ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டு வர அரிசினர் முன் வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான கட்டுப்பாடு 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு வரப்பட்டது. வர்த்தகம், வியாபாரம், போக்குவரத்து, இவைகளுக்கு அது இடைஞ்சலாக இருக்கிறது என்ற காரணத்தால் அது கைவிடப்பட்டது.

திரு. சா. கணேசன் : லாரி விபத்துக்களுக்கு முக்கியமான காரணங்களாகக் காணப்படுகின்றனவை அதிகப்படியான பிரகாசம் உள்ள விளக்கு, அதிகபட்ச வேகம், என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். ஆகவே லாரிகளின் விளக்கு ஒளி நேரடியாகப் பாயாமல் இருப்பதற்கு முக்கியமான தடை நடவடிக்கை எடுத்துக் கொள்வதும் வேகத்தைக் கட்டுப்படுத்துவதாகும். ஆகவே 30 அல்லது 40 மைல் ஸ்பீடுக்கு மேல் போகக் கூடாது என்று வரையறை செய்து அதற்குத் தகுந்தவாறு ஒரு மெகானிகல் அரேஞ்ச்மெண்டை மோட்டார் காரிலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொன்ன விதிகள் ஏற்கனவே இருக்கின்றன. இந்த லாரிகளின் ஸ்பீட் 25 மைல், 30 மைல் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று விளக்குகள் மேலே டிம் செய்யப்படவேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. லாரிகளை வேகமாக ஓட்டுவதைத் தடுக்கக்கூடிய கவர்னர் வைக்கலாமா என்பதைப் பரிசீலனை செய்து பார்த்ததில் இன்னும் லாரி விபத்துக்கள் அதிகரிக்குமோ என்ற காரணத்தினால் அது கைவிடப்பட்டது. ஏனென்றால் ஏதாவது ஒரு இடத்திலே வேகமாக ஓட்டி ஓவர்டேக் செய்து விபத்தைத் தடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும். சில சந்தர்ப்பங்களில் விபத்தைத் தடுப்பதற்காகவே வேகமாக ஓட்ட வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, கவர்னர் வைத்து 25 மைல் அல்லது 30 மைலுக்கு மேல் போகக் கூடாது என்ற ஒரு நிலைமையை உண்டாக்கி விட்டால், அதுவே சில விபத்துக்களுக்குக் காரணமாக இருக்குமோ என்பதினால் கைவிடப் பட்டது.

20th January 1965]

திரு ஆ. தங்கவேலு: 1963-64-ஆம் ஆண்டை விட 1964-65-ல் லாரி விபத்துக்கள் அதிகமா? அல்லது குறைவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இன்னும் 1964-65 முடிவு அடையவில்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணர்: இந்த லாரி விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, எவ்வளவு பேர்களுக்கு காம்பென்சேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்கொன்று விதிகள் இருக்கின்றன. கிளெய்ம்ஸ் டிரிபியூனல் இருக்கிறது. அதன் மூலமாகத் தான் காம்பென்சேஷன் கொடுக்கிறார்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, are the Government aware that most of these accidents occur around the City on account of the fact that lorry drivers are given wages on the basis of trips that they make from one place to another place in the City ? As a result of it, they drive their vehicles at a fast speed and thus accidents occur. So, will the Government issue instructions to see that owners pay them wages on a monthly basis and not on the basis of the trips that they make?

THE HON. SRI R. VENKATARAMAN : There are general regulations with regard to wages etc., but it would not be possible for the Government to say on what basis wages should be paid.

திரு. வை. சங்கரன்: சார், தற்போது டி.வி.எஸ் ஸ்தாபனத்தார், தங்களுடைய ஸதர்ன் ரோட்வேஸ் வண்டிகளில் 'கவர்னர்கள்' வைத்திருக்கிறார்கள். அது நல்ல முறையில் வேலை செய்வதாகத் தெரிகிறது. அதை சர்க்கார் ஏற்றுக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: டி.வி.எஸ். ஸ்தாபனத்தார் 'கவர்னர்' வைக்கவில்லை என்கிற தகவலை நான் இப்பொழுது அங்கத்தினருக்கு கொடுக்கிறேன். (சிரிப்பு).

திரு. எஸ். நஞ்சுண்டராவ்: சார், லாரி டிரைவர்கள் இரண்டு நாட்கள்கூட சேர்ந்தாற்போலத் தூங்காமல் வண்டிகளை ஓட்டுவதால்தான் பல ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே லாரி ட்ரைவர்களுடைய லிவிங் கண்டிஷன்களை கொஞ்சம் நல்லமுறையில் மாற்றி அமைத்து அதைச் சீர்திருத்த சர்க்கார் ஏதாவது நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்காகத் தனிச் சட்டம் இருக்கிறது. ட்ரான்ஸ்போர்ட் ஒர்கர்ஸ்க்கு ஆன சட்டம் இருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: சார், இந்த லாரி விபத்துக்கள் ஏற்பட, பெருவாரியாக லாரி ட்ரைவர்களே காரணமாக இருக்கிறார்கள். ஆகவே ட்ரைவிங் லைசென்ஸ் கொடுக்கும் போது,

அப்படிக் கொடுத்த பிறகு அவர்கள் முதலில் 3 அல்லது 4 ஆண்டுகள் சிறிய வண்டிகளை ஓட்டி அனுபவம் பெற்ற பிறகு ஹெவி வெஹிகிள்களை ஓட்டக் கூடிய ஒரு சட்டத்தை சர்க்கார் இயற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்வது போன்று இப்பொழுது அமுலில் இருக்கிறது. ஹெவி என்டார்ஸ்மெண்ட் இல்லாமல் யாரும் லாரி ஓட்டமுடியாது. அவர்கள் 'லைட்' வெஹிகிள்களை ஓட்டிப் பழகிய பிறகு, ஹெவி வெஹிகிள்களை ஓட்டிப் பழக வேண்டும். அதன் பிறகுதான் அவர்களுக்கு ஹெவி எண்டார்ஸ்மெண்ட் கொடுக்கப் படுகிறது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : சார், இம்மாதிரி விபத்துக்கள் சாலைகளில் வளைவுகள் இருக்கும் இடங்களிலும், பாலங்கள் இருக்கும் இடங்களிலும் தான் அதிகமாக ஏற்படுகின்றன. அதுவும் குறுகலாக இருக்கும் இடங்களில் ஏற்படுகின்றன. ஆகவே, அம்மாதிரிக் குறுகலாக இருக்கும் ரோடுகளை அகலப்படுத்தவும், வளைவுகளை நிமிர்த்தவும் நடவடிக்கை எடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ரோடுகளைச் சரியாக அமைக்க வேண்டும் என்பதை நானும் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் இந்த லாரி விபத்துக்கள் சென்னையிலிருந்து விழுப்புரம் போவதற்குள், அவ்வளவு அகலமாக இருக்கும் ரோட்டில்தான் ஏற்படுகின்றன. அதற்குக் காரணம்தான் புரியவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், லாரி விபத்துக்கள் ஏற்பட ட்ரைவர்கள் காரணம் என்பது ஒருபுரம் இருக்கட்டும். ஆனால் லாரிகளைக் கண்டு பயந்து, சாலையில் விலகிக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு மற்றவர்களுக்கும் இருக்க வேண்டும். வண்டி ஓட்டுகிறவர்கள்கூட தூங்கிக் கொண்டே ஓட்டுகிறார்கள். நகரத்தில் இப்பொழுது 'பாதுகாப்பு' வாரம் நடத்தப் படுவதுபோல, ராஜ்யம் பூராவிலும் அப்படி விலகிக்கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியை ஏற்படுத்த, ரோடுகளின் ஓரங்களில் போகவேண்டும் என்ற உணர்ச்சியை ஏற்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் சர்க்காருடைய நோக்கம். எந்த அளவுக்குப் பொதுமக்கள் ஒத்துழைக்கிறார்களோ அந்த அளவுக்குத்தான் பலன் ஏற்படும். அதற்காகத்தான் இப்படிப் பட்ட வாரங்கள் கொண்டாடப் படுகின்றன. மொபஸலிலும் இப்படி வாரங்கள் கொண்டாடுவது பற்றி சர்க்கார் பரிசீலிக்கும்.

* 20 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of fatal accidents in the traffic of motor vehicles during the year 1963-64 in the State ?

THE HON. SRI R. VENKATARAMAN : 661.